# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2252/7 - 2021 නොවැම්බර් මස 01 වැනි සඳුදා - 2021.11.01

*2252/7 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(2ஈ) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

காலி மாவட்டத்தில் பலபிட்டிய ஹரஸ்பொல கடற்றொழில் துறைமுகம் நிர்மாணிக்கும் செயற்றிட்டம்

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக கொழும்பு 10, மாளிகாவத்தை, கடற்றொழில் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட காலி மாவட்டத்தில் பலபிட்டி ஹரஸ்பொல கடற்றொழில் துறைமுகம் நிர்மாணிக்கும் செயற்றிட்டத்துக்கு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொது மக்களின் பரிசீலனைக்காக கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் நாள் முழுவதும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2021.11.01 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும் (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களைத் தவிர).

இதற்கு மேலதிகமாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.coastal.gov.lk இல் மும்மொழிகளிலும் தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (1) | கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம் | - | புதிய செயலகம், 4 ஆவது மாடி, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| (2) | பிரதேச செயலாளர் அலுவலகம் | - | பலபிட்டிய |
| (3) | மாவட்ட செயலாளர் அலுவலகம் | - | காலி |
| (4) | பிரதேச செயலாளர் அலுவலகம் | - | பலபிட்டிய |
| (5) | கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் | - | மாவட்ட அலுவலகம், காலி |

| | | |
|---|---|---|
| (6) மத்திய சுற்றாடல் அதிகார சபை | - | இல. 104, "பரிசர பியச", டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை. |
| (7) மத்திய சுற்றாடல் அதிகார சபை | - | மாவட்ட அலுவலகம், கொக்கல. |
| (8) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம் | - | பிரதேச அலுவலகம், உனவட்டுன, காலி. |

இந்த உத்தேச செயற்றிட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொதுமக்களின் கருத்துக்களை 2021.11.01 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகிறேன்.

பொறியியலாளர் **ஆர். ஏ. எஸ். ரணவக்க,**
பணிப்பாளர் நாயகம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்,
4 ஆவது மாடி,
புதிய செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி இல. : 011-2449754, 011-2387922, 011-2449197.
தொலைநகல் இல. : 011-2438005, 011-2472623.

11-302

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.